


திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் நகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுத் திட்டம் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகளை கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு. தங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், நகர மன்ற துணை தலைவர் உமாமகேஸ்வரி குணா மற்றும் பலர் உடனிருந்தனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை ... 8 ஆம் பக்கத் தொடர்ச்சி!

வருமானம் குறைவு - செலவு அதிகம், இதுதான் நம்முடைய நிலை! பேரறிஞர் அண்ணாதான் சொன்னார். பெட்டி இருக்கிறது! பூட்டு இருக்கிறது! சாவி இருக்கிறது! ஆனால், பெட்டி காலியாக இருக்கிறது என்று சொன்னார். திட்டமிட்டு செயற்கையாக இந்த நிதி நெருக்கடியை உருவாக்குகிறார்கள்! அரசியல் ரீதியாக மட்டுமல்ல, நிர்வாகரீதியாகவும் அவர்களை வெற்றிகரமாக சமாளித்துதான், அரசு ஊழியர்களின் கோரிக்கை களையும் நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறோம்!

**பழைய ஓய்வூதியக் கோரிக்கை நிறைவேற்றம்!**

பழைய ஓய்வூதியம் குறித்த கோரிக்கையை 22 ஆண்டுகளாக நீங்கள் வைத்துகொண்டு இருக்கிறீர்கள்! யார் ஆட்சியில் இந்த உரிமை பறிக்கப்பட்டது? அ.தி.மு.க. ஆட்சியில்! அப்போது, நீங்கள் நடத்திய போராட்டங்கள் சாதாரணமானவைகளா?

வியர்வைத்துளி சிந்தி உழைத்த உங்களுக்கு இரத்தக்கண்ணீரை வரவைத்ததுதான், கருணையில்லா அ.தி.மு.க. ஆட்சி! ஆனால், இது அனைவரையும் அரவணைக்கும் கருணையே வடிவான தி.மு.க. ஆட்சி!

அதனால்தான், உங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து, அரசு அலுவலர்களுக்கு முறையான ஓய்வூதியத்தை வழங்குவதற்கான, தகுந்த பரிந்துரைகளை வழங்க, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

திரு. ககன்தீப் சிங் பேடி அவர்கள் தலைமையில், ஒரு குழுவை அமைத்தோம். அவர்களும் அறிக்கை அளித்தார்கள். தொடர்ந்து, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உங்களிடம் உட்கார்ந்து தொடர்ந்து பேசினார்கள். உங்களின் நலன் மற்றும் எதிர்பார்ப்புகள், தமிழ்நாட்டின் நிதிநிலை, எதிர்காலத்தில் அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு எந்தவித தடைகளும் இல்லாமல் முறையாக ஊதியமும், ஓய்வூதியமும் கிடைக்கச் செய்யவேண்டிய பொறுப்பு என்று எல்லா வற்றையும் பரீசிலனை செய்துதான், “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை” அறிவித்தோம்!

**உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின் பலன்கள்!**

இந்த ஓய்வூதியத் திட்டத்தின் பலன்களை சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால்,

- மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில், 50 விழுக்காடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். இதற்கு, பணியாளர்களின் 10 விழுக்காடு பங்களிப்புடன், ஓய்வூதிய நிதியத்திற்கு தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்!
- 50 விழுக்காடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு, ஆண்டு தோறும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை, அரசு அலுவலர் களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான, அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும்.
- ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால், அவர் ஏற்கனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர் களுக்கு, அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 விழுக்காடு குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்!
- அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கு ஏற்ப

25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல், பணிக்கொடை வழங்கப்படும்.

- புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல், பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும், குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்.
- பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணியில் சேர்ந்து, புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னர், இடைப்பட்ட காலத்தில் ஓய்வூதியமின்றி பணி ஓய்வு பெற்றவர்களுக்கு சிறப்பு கருணை ஓய்வூதியம் வழங்கப்படும். இனி, இதை கருணை ஓய்வூதியம் என்று சொல்லாமல், உங்களின் உழைப்பிற்கான உரிமைத் தொகை என்றே வழங்குவோம்!

இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதால், ஓய்வூதிய நிதியத்திற்கு தமிழ்நாடு அரசு கூடுதலாக 13 ஆயிரம் கோடி ரூபாய் அளிக்க வேண்டும். இது மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும், சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாயை அரசின் பங்களிப்பாக வழங்க வேண்டும்! இந்தப் பங்களிப்புத் தொகை பணியாளர்களின் ஊதியத்திற்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் மேலும் உயரும்.

இப்போது தமிழ்நாடு அரசு சந்தித்து வரும் கடுமையான நிதிச்சூழலிலும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்களைக் காக்க வேண்டும் என்று, இப்போது சொன்ன அத்தனை செலவினங்களையும் தமிழ்நாடு அரசே ஏற்கும் என்று நான் உறுதி அளிக்கிறேன்!

இந்த ஓய்வூதியத் திட்டம் எவ்வளவு சிறப்பானது என்று, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சோமசுந்தரம் அவர்கள் உள்ளிட்ட பலரும் பேட்டிகளைக் கொடுத்திருந்தீர்கள்! அதை யெல்லாம், நீங்கள் அனைத்து அரசு ஊழியர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்!

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் பழனிசாமி அவர்கள், ஆட்சியில் இருந்தபோது, அரசு ஊழியர்களை எப்படி எல்லாம் கொச்சைப்படுத்திப் பேசினார்? இங்கு குறிப்பிட்டுச் சொன்னார்களே... எப்படி எல்லாம் விளம்பரம் கொடுத்தார்கள் என்பதையெல்லாம் நான் அதிகம் நினைவூட்ட வேண்டிய அவசியமில்லை! ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் எதிராக கூட்டணி அமைத்திருப்பவர்கள், அரசு ஊழியர்களுக்கு மட்டும் ஆதரவாக இருப்பார்களா? சிந்திச்சுப் பாருங்கள்! ஆனால், நாங்கள் அப்படி இல்லை!

எங்களைப் பொறுத்தவரைக்கும், சொன்னதைச் செய்வோம்! சொல்வதைத்தான் செய்வோம்! செய்து, உங்களின் பாராட்டுகளைப் பெறுவோம்! நான் உறுதியாகச் சொல்கிறேன். உங்களின் கோரிக்கைகள் - கனவுகள் - எதிர்ப்பார்ப்புகளை நாங்கள் நிச்சயம் திராவிட மாடல் 2.0 ஆட்சியிலும் தொடர்ந்து நிறைவேற்று வோம்! அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் எங்களுக்கு பக்கபலமாக இருங்கள்! உங்களுக்கு பக்கபலமாக நாங்கள் இருக்கிறோம்!

**வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

“என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” குழுவினர் (BLA2, BLC, BDA)

# தி.மு.க. சென்னை மற்றும் விழுப்புரம் மண்டல பயிற்சி மாநாடு! கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட BLA2, BLC, BDAக்கள் பங்கேற்பு!

## மாவட்ட செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னிலையிலும், நாளை (11.02.2026 - புதன்கிழமை), மாலை 03.00 மணியளவில், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் அருகே திருவிடந்தையில், “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” குழுவினரின் தி.மு.க. சென்னை மற்றும் விழுப்புரம் மண்டல மாநாடு நடைபெற உள்ளது.

அது சமயம் இம்மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார் கோயில், குறிஞ்சிப்பாடி, கடலூர், சிதம்பரம், புவனகிரி ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2), பாக நிலைக்குழு உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் (BDA), அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

மேலும் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**
*செயலாளர்*
*கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.*


குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்!

# பிரதமர் மக்களவையில் பதிலுரைக்க மறுத்து விட்டதன் மூலம் தம் மீதான குற்றச்சாட்டுகள் உண்மை என நிரூபித்து விட்டார்!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம்!

*சென்னை, பிப். 10 -*

குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு மக்களவையில் பதிலுரை அளிக்க மறுத்துவிட்டதன் மூலம், தன் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மைதான் என பிரதமர் மோடி நிருபித்து விட்டதாக தி இந்து நாளிதழ் விமர்சித்துள்ளது.


THE HINDU

**Question and answer**

Parliament must function as the forum to debate contentious issues

In an unusual departure from established parliamentary convention, the Lok Sabha adopted the motion of thanks to the President's address to Parliament without the Prime Minister's reply to the debate on February 5. The explanation by the Lok Sabha Speaker, Om Birla, for the PM not replying to the discussion on the motion raised more questions than it answered. Mr. Birla said that he had concrete information about Opposition Members of Parliament (MP) planning something "unexpected", obliquely

*Question and answer: on Parliament, parliamentary norms* எனும் தலைப்பில் தி இந்து நாளேடு தலையங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், நாடாளுமன்ற மரபுகளுக்கு மாறாக பிப்ரவரி 5 அன்று மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைமீதானவிவாதத்திற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பிரதமரின் பதிலுரை இல்லாமலேயே, நிறைவேற்றப்பட்டதையும், அத்தீர்மானம் குறித்த விவாதத்திற்கு பிரதமர் பதிலளிக்காதது குறித்து சபாநாயகர் ஓம் பிர்லா அளித்த விளக்கம், விடைகளை விட அதிக கேள்விகளையே எழுப்பியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் எதிர்பாராத ஒன்றைச் செய்யத்திட்டமிடுவதாகத் தன்னிடம் உறுதியான தகவல் இருப்பதாக சபாநாயர் கூறியதை சுட்டிக் காட்டி உள்ள அத்தலையங்கம், எம்.பி.க்களால் தீங்கு ஏற்படும் என்ற அச்சத்தில் அவையில் பேசுவதை பிரதமர் தவிர்த்ததாக கூறுவது விசித்திரமானது என்றும் தெரிவித்துள்ளது.

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் எம்.எம். நரவனே எழுதிய புத்தகத்திலிருந்து சில பகுதிகளை மேற்கோள் காட்ட முயன்ற போது, அதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்தது, இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடந்த நிகழ்வுகள், பிரதமர் மக்களவையில் பதிலுரை அளிக்காதற்கான முக்கிய காரணம் எனறும், சபாநாயர் மற்றும் பிரதமரின் இவ்விரண்டு செயல்களும்

நாடாளுமன்ற மரபுகளுக்கு எதிரானவை என்றும் ஜனநாயகப் பொறுப்புக்களில் இருந்து விலகும் கவலையளிக்கும் சரிவு என்றும் இத்தலையங்கம் சுட்டிக்காட்டி உள்ளது. விவாதமும், பிரதமரின் பதிலுரையும், அரசு நிர்வாகம் நாடாளுமன்றத்திற்கு கட்டுப்பட்டது என்பதை உணர்த்தும் நடவடிக்கை என்றும், பிரதமரின் இருக்கைக்கு அருகில் எதிர்பாராத சூழ்நிலை ஏற்படக்கூடும் என்பதால் பிரதமர் அவைக்கு வர வேண்டாம் என்று தாம் கேட்டுக்கொண்டதாக சபாநாயகர் கூறியதை விமர்சித்துள்ள தி இந்து தலையங்கம், பிரதமரின் பதில் இல்லாமல் விவாதத்தை முடித்து க்கொள்ள அவை விரும்பி னால், அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

கேள்விக்குரிய புத்தகம் வெளியிடப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், அதன் உள்ளடக்கங்களை உறுதிப்படுத்தி, அதை சபாநாயகரிடம் அளிக்க தயாராக இருந்த ராகுல் காந்தியை அவையில் பேச அனுமதித்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள தி இந்து தலையங்கம், அந்தப் புத்தகம் தேசிய பாதுகாப்பு தொடர்பான முக்கிய பிரச்சினைகளை எழுப்புவதாகவும், இவற்றை விவாதிப்பதற்கான வாய்ப்பை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மறுப்பது நியாயப்படுத்த முடியாத செயலாகும் என்றும் விமர்சித்துள்ளது. நாடாளுமன்றத்திற்கு வெளியே ஜெனரல் நரவனேவின் புத்தகத்தில் இருந்து ராகுல் காந்தி சுட்டிக்காட்டிய பகுதிகள், உண்மையாக இருந்தால், தேசப் பாதுகாப்பு தொடர்பான விவகாரத்தில் ஒன்றிய அரசு தனது பொறுப்பை தட்டிக் கழித்துள்ளது எனத் தெரிவித்துள்ள தி இந்து தலையங்கம்,மக்களவையில் பதிலுரை அளிக்க மறுத்துவிட்டதன் மூலம் தன் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மைதான் என்பதை பிரதமர் மோடி நிரூபித்து விட்டார் என்றும் விமர்சித்துள்ளது.

# முன்னாள் ஏ.டி.ஜி.பி. இராதாகிருஷ்ணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 10 -

முன்னாள் ஏ.டி.ஜி.பி. டி இராதாகிருஷ்ணன் அவர்கள் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலை மறைந்த டி.இராதாகிருஷ்ணன் குடும்ப த்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஏ.டி.ஜி.பி. டி. ராதாகிருஷ்ணன் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முன்னாள் ஏ.டி.ஜி.பி. T. ராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

நான் சென்னை மாநகர மேயராக இருந்த காலத்தில் சென்னை மாநகர இணை ஆணையராக ராதாகிருஷ்ணன் அவர்கள் பணியாற்றினார். 1981 பேட்ச் ஐ.பி.எஸ். அதிகாரியான அவர், ஏ.எஸ்.பி. முதல் ஏ.டி.ஜி.பி. வரை காவல்துறையின் பல்வேறு பொறுப்புகளில் சட்டம் ஒழுங்கைத் திறம்படக் கையாண்டிருக்கிறார்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர் மற்றும் காவல்துறை நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

52 வாரங்களில் 52 சீர்திருத்தங்கள் திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டில் ரயில் பயணிகள் பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

*புதுடெல்லி, பிப்.10 -*

மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை ரயில்வே துறை தொடர்பாக எழுப்பிய கேள்விகள் வருமாறு:



(அ) “52 வாரங்களில் 52 சீர்திருத்தங்கள்” திட்டத்தில் தமிழ்நாடு உட்பட நாட்டில் பயணிகள் பாதுகாப்பு மற்றும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கான குறிப்பிட்ட இலக்குகள் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

(ஆ) தேசிய அளவில் தொடருந்து விபத்துக்கள் குறைந்துள்ளதாகக் கூறப்படுவதால் தமிழ்நாட்டில் ரயில் பாதைகளில் பாதுகாப்பு விளைவுகள் மேம்பட்டுள்ளனவா? அப்படியானால், அதன் விவரங்கள் குறிப்பாக செயல்பாட்டுத் திறன் நிர்வாகம், வெளிப்படைத்தன்மை மற்றும் சேவை வழங்கலில் மேம்பாடுகளில் கவனம் செலுத்துகின்றன.

(இ) இந்திய ரயில்வேயால் ஏற்படும் மொத்த பட்ஜெட் ஆதரவு மற்றும் மூலதனச் செலவு தமிழ்நாட்டில் புதிய ரயில் சேவைகள், தண்டவாள புதுப்பித்தல் மற்றும் நிலைய மறுமேம்பாட்டுத் திட்டங்களுக்கு விகிதாசார ஒதுக்கீடு செய்ய வழிவகுத்ததா, அப்படியானால், அதன் விவரங்கள்;

(ஈ) தமிழ்நாட்டில் அதிக அடர்த்தி மற்றும் அதிக ஆபத்துள்ள வழித்தடங்களில் கவாச் தானியங்கி ரயில் பாதுகாப்பு செயல்படுத்தப்பட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் நிலுவையில் உள்ள கவரேஜுக்கான காலக்கெடு;

(இ) பூர்த்தி செய்யப்படாத ரயில்வே உள்கட்டமைப்பு மற்றும் சேவைத் தேவைகளை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு தமிழ்நாடு மாநில அரசுடன் ஆலோசனை நடத்தியதா, அப்படியானால், அதன் விவரங்கள்;

(f) இந்த சீர்திருத்தங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு அரசாங்கத்தால் ஏதேனும் சுயாதீன மதிப்பீடு அல்லது செயல்திறன் தணிக்கை நடத்தப்பட்டதா, அப்படியானால், அதன் விவரங்கள்;

(g) இந்த சீர்திருத்தங்களை நீண்ட கால அடிப்படையில் நிறுவனமய மாக்குவதற்கும், செயல்திறன், நிர்வாகம் மற்றும் பயணிகள் திருப்தி ஆகியவற்றில் நிலையான முன்னே ற்றங்களை உறுதி செய்வதற்கும் எடுக்கப்பட்ட/எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய ரயில்வே இணை அமைச்சர் விரிவாக பதிலளித்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டத்தில் தூய்மை பணியாளர் களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததை முன்னிட்டு வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு தொகுதி பள்ளி கொண்டா பேரூராட்சியில் உள்ள தூய்மைப் பணியாளர் களுக்குஉணவு வழங்கும் திட்டத்தைமாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி தலைமையில் தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். உடனி மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, ஒன்றிய செயலாளர் பி.வெங்கடேசன், பேரூர் செயலாளர் ஜாகீர்உசேன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.